# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



(69) (79)

பதிவஞ்சல் ஒப்புகையுடன் :

# தமிழ்நாடு அரசு

## நகர் ஊரமைப்பு துறை

**இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் மாவட்டம், அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு.மு.சேகரன், எம்.இ.,**

ந.க.எண்.298/2020/வே.உ.தி.கு,

நாள்.25.05.2022.

| | |
|---|---|
| பொருள் : | குடியிருப்பு மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் / வேலூர் உள்ளூர் திட்டக்குழுமம் – வேலூர் மாவட்டம் / மாநகராட்சி, காட்பாடி வட்டம் / கிராமம், ஒப்புதல் அளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.11, சர்வே எண்.575/2எ ஆகியவற்றில் 0.988 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் – தொர்பாக. |
| பார்வை : | 1. மனுதாரர் திரு.R. குமாரசாமி அவர்களின் கடிதம், நாள்.02.06.2020.<br>2. இணையதள விண்ணப்பம் எண். 202001801014732, நாள்.18.05.2020.<br>3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள். 28.09.2020. (சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது).<br>4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/போ, நாள். 24.12.2020.<br>5. மனுதாரர் திரு.R. குமாரசாமி அவர்களின் கடிதம், நாள்.19.04.2022. (சாலைகள் ஒப்படைக்கபட்டு தானப் பத்திரம் அசல் மற்றும் வில்லங்கச் சான்று சமர்ப்பிக்கப்பட்டது)<br>6. அரசாணை(நிலை)எண்.397, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி[நவ4(3)]த் துறை, நாள்.12.09.1996.<br>7. அரசாணை(நிலை)எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி[நவ4(3)]த் துறை, நாள்.04.06.2004.<br>8. அரசாணை(நிலை)எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.04.05.2017,<br>9. அரசாணை(நிலை)எண்.18, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.<br>10. அரசாணை(நிலை)எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி[நவ4(3)]த் துறை, நாள்.23.09.2020.<br>11. அரசாணை(நிலை)எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி[நவ4(3)]த் துறை, நாள்.09.12.2020.<br>12. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.30.08.2017. |

x R. Kumar

| | |
|---|---|
| | 13. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்13686/2017/LA1, நாள்.08.09.2017.<br>14. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/ந.ஊ.2, நாள்05.02.2020.<br>15. பூங்கா பரப்பிற்கு ஈடான OSR கட்டணம் செலுத்துமாறு கோரப்பட்ட நாள். 28.09.2020.<br>16. பூங்கா பரப்பிற்கு ஈடான OSR கட்டணம் செலுத்தப்பட்ட நாள். 20.10.2020.<br>17. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்.06.05.2022. (வளர்ச்சி கட்டணம், நன்னிலைவரி மற்றும் கொடிநாள் நிதி கட்டணம் கோரப்பட்டது)<br>18. மனுதாரரின் கடிதம், நாள்.12.05.2022. (வளர்ச்சி கட்டணம், நன்னிலைவரி கட்டணம் மற்றும் கொடிநாள் கட்டணம் செலுத்தப்பட்டது)<br>****** |

வேலூர் உள்ளூர் திட்டக்குழுமம் – வேலூர் மாவட்டம் / மாநகராட்சி, காட்பாடி வட்டம் / கிராமம், ஒப்புதல் அளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.11, சர்வே எண்.575/2எ–ல் 0.988 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, பார்வை 1–ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பார்வை 3–ல் சுட்டிய இவ்வலுவலக 28.09.2022, நாளிட்ட கடிதம் மூலம், மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது.

பார்வை 5–ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக, மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோகம் பகுதியினை தானப்பத்திர எண்.2373/2022, நாள்.11.03.2022–ன்படி, ஆணையாளர், வேலூர் மாநகராட்சி அவர்களின் பதவிக்கு ஒப்படைக்கப்பட்டும் மற்றும் TANGEDCO ஒதுக்கீடு பகுதியினை தானப்பத்திர எண்.2372/2022, நாள்.11.03.2022–ன்படி மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வேலூர் மாவட்டம் அவர்களின் பதவிக்கு ஒப்படைக்ப்பட்டும் தானபத்திர ஆவணம் பெறப்பட்டுள்ளது. மேலும், பூங்கா பரப்பிற்கு ஈடான OSR கட்டணம் செலுத்தப்பட்டதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1. மனைப்பிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி, ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு <u>ம.வ/வே.உ .தி.கு.(வே.மா)எண்.14/2022</u> மற்றும் <u>திட்ட அனுமதி எண். 16/2022</u> என எண்ணிடப்பட்டு, இரண்டு அசல் வரைபடங்கள் இரண்டு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

2.. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது, மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)–ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

81

3. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகம் மற்றும் நில அளவைத் துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

4. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனை :**

1. (a) பார்வை 9-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47(11)-ன்படி, மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads. Storm water drains and street lights form the applicants". After collecting the necessary fees the final layout sketch. Permit of Planning Authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning Authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும், (EWS) மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி, EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 12 மற்றும் 13-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி, உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்த வருவாய் ஆவங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O(Ms)No.112, Housing and Urban Development Department, dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி, நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 8-ல் கண்டுள்ள அரசாணையின்படி, திட்டமில்லா பகுதி / திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், விதி என்.3-ன்படி, கூராய்வு கட்டணமாக மனை 1- க்கு

ரூ.1000/-ம் வீதம் மற்றும் விதி எண்.9-ன்படி, இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா தான பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபாக்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. எனவே, சொத்தினை வாங்க, விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும், மேலும், அதன்மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால், அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

7. பார்வை 6 மற்றும் 7-ல் கண்ட அரசாணையின் படி மனைப்பிரிவுகளுக்கான, வளர்ச்சி கட்டணம், OSR கட்டணம், நன்னிலைவரி மற்றும் Armed Force Flag Day Fund கட்டணம் ஆகியவை பார்வை 17-ல் சுட்டியவாறு கோரப்பட்டு பார்வை 18-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தபட்டுடள்ளது. அதற்கான விவரம் பின்வருமாறு

    i. OSR கட்டணம் ரூ.7,100/-க்கான SBI, Vellore கிளை, நாள்.20.10.2020 செலுத்தியதற்கான செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.
    ii. வளர்ச்சி கட்டணம் ரூ.8,000/-க்கான Canara Bank, Vellore கிளை, நாள்.12.05.2020 செலுத்தியதற்கான செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.
    iii. நன்னிலைவரி கட்டணம் ரூ.6,000/-க்கான SBI, Vellore கிளை, நாள்.12.05.2022. செலுத்தியதற்கான செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.
    iv. ரூ 3,000/- க்கான Armed Forecs Flag Day Fund என்ற பெயரில் Payable at Vellore, SBI Bank, D.D.No: 202475, Dt-12.05.2022-ல் பெறப்பட்டுள்ளது.

25/5/22

உறுப்பினர் செயலர்,
வேலூர் உள்ளூர் திட்டக்குழுமம் /
இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
வேலூர் மாவட்டம்.

25/5/22

**பெறுநர் :**

1. ஆணையாளர்,
   வேலூர் மாநகராட்சி,
   வேலூர் மாவட்டம்.

**இணைப்பு :**

I. மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் – 2 தொகுப்பு.
ii. தானப்பத்திர ஆவண எண்.2373/2022, நாள்.11.03.2022-ன் நகல்
iii. தானப்பத்திர ஆவண எண்.2372/2022, நாள்.11.03.2022-ன் நகல்

**நகல் :**

| | |
|---|---|
| 1. மனுதாரர் முகவரி:<br>திரு.R. குமாரசாமி,<br>எண். 9, தர்மலிங்கம் தெரு,<br>காட்பாடி,<br>வேலூர் – 632 007. | **இணைப்பு– செயலாணை கடிதம் மட்டும்** |
| 2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கக்கடுகிறது. | **இணைப்பு– செயலாணை கடிதம் (ம) பூர்த்தி செய்த படிவம்–1, மனைப்பிரிவு வரைபடம்–1.** |
| 3. உதவி இயக்குநர்,<br>நில அளவை (ம) பதிவேடுகள் துறை,<br>வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர் மாவட்டம். | **இணைப்பு– செயலாணை கடிதம் (ம) பூர்த்தி செய்த படிவம்–1, மனைப்பிரிவு வரைபடம்–1.**<br><br>**சாலை (ம) பொது ஒதுக்கீடு பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு** |
| 4. சார்பதிவாளர்,<br>காட்பாடி சார்பதிவாளர் அலுவலகம்,<br>வேலூர் மாவட்டம். | |
| 5. வட்டாசியர்,<br>காட்பாடி வட்டம்,<br>வேலூர் மாவட்டம். | |
| 6. THE CHAIR PERSON,<br>Tamil Nadu Real Estate Regulatory Authority,<br>CMDA Tower – II, 1st Floor, No. 1A,<br>Gandhi Irwin Bridge Road,<br>Egmore,Chennai – 600 008. | **இணைப்பு– செயலாணை கடிதம் (ம) பூர்த்தி செய்த படிவம்–1, மனைப்பிரிவு வரைபடம்–1.** |
| 7. பதிவறை | **இணைப்பு–உ செயலாணை கடிதம் (ம) பூர்த்தி செய்த படிவம்–1, மனைப்பிரிவு வரைபடம்–1.(ம)குறுந்தகடு (CD)–1** |

(7)

<u>வேலூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்</u>
<u>முன்னிலை:</u> <u>திரு. P. அசோக்குமார்,</u> M.Sc, M.Phil., APGDUM.,

<u>ந.க.எண்:5643/2022/எப்1</u>

நாள்: 17.06.2022

**பொருள்:** மனைப்பிரிவு - வேலூர் மாநகராட்சி – காட்பாடி சர்வே எண்.575/2A-ல் 0.988 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - இறுதி அங்கீகாரம் வழங்கி உத்திரவிடுதல் - தொடர்பாக.

**பார்வை:**
1. மனுதாரர் விண்ணப்பம் நாள்: 14.03.2022.
2. மாமன்ற தீர்மானம் எண்.110, நாள்:22.04.2022.
3. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கடித ந.க.எண்.278/20/வேஉதிகு, நாள்:25.05.2022.

*****

**<u>உத்திரவு:-</u>**

பார்வையில்-3ல் காணும் கடிதத்தில் வேலூர் மாநகராட்சி, காட்பாடி கிராமம் நில அளவு எண்.575/2A-ல் 0.988 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த மனைபிரிவில் அமைந்துள்ள பொது ஒதுக்கீடு (ம) சாலைகளை பதிவு எண்.2373, தேதி.11.03.2022-ல் சார்பதிவாளர் காட்பாடி அலுவலகத்தில் மாநகராட்சி ஆணையர் அவர்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தனது சொந்த செலவில் சாலைகள், கால்வாய்கள், தெருவிளக்கு (ம) குடிநீர் பகிர்மான குழாய் அமந்துள்ளதாக பார்வை 1-ல் காணும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இதனை பார்வை 2-ல் காணும் இம்மாமன்ற தீர்மானம் மூலம் சாலைகள், பொது ஒதுக்கீட்டினை தன் பராமரிப்புக்கு ஏற்றுள்ளது.

பார்வை-2ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும், மேற்படி மனைப்பிரிவு கடிதத்தில் தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், மேற்படி மனைப்பிரிவு நிபந்தனைகளை மனைப்பிரிவு உரிமையாளர்கள் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் எனவும், இப்பொருள் குறித்து கோவை (வேலூர்) மாநகராட்சி சட்டம் 1981ல் கண்டுள்ள சட்ட விதிகளை பின்பற்றி நடக்க வேண்டும் எனவும், மனைப்பிரிவு தொடர்பாக அரசு தொடர்புடைய அரசு துறைகள் மற்றும் மாநகராட்சி பிற்காலத்தில் விதிக்கும் நிபந்தனைகள் துணை விதிகள் போன்றவற்றினை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு வரைபடங்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கி இதன் வாயிலாக உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
வேலூர் மாநகராட்சி

17/6/2022

**பெறுநர்:-**
திரு. ஆர். குமாராசாமி,
நெ.9, தர்மலிங்கம் தெரு,
காட்பாடி,
வேலூர் மாவட்டம்.

**நகல்:-** உறுப்பினர் செயலர், வேலூர்.
உள்ளூர் திட்டக் குழுமம், வேலூர் அவர்களுக்கு தகவலுக்கு அனுப்பப்படுகிறது.

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



## empowering your real estate decisions with smart tools

### Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

### Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

### Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

### Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

### Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate